## மகாவலி லைவ்ஸ்ரொக் என்டபிறைசஸ் லிமிட்டட் கம்பனி – 2016/2017

வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்டபிறைசஸ் லிமிட்டட் கம்பனியின் 2016 ஏப்ரல் 01 முதல் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2016/2017 மற்றும் 2017/2018 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென பணிப்பாளர் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016/2017 மற்றும் 2017/2018 ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கைகள் 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நிலவுகை

கம்பனியால் தயாரிக்கப்பட்ட 2015 மார்ச் 31 ஆந் திகதியில் மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | 3/31/2016<br>பெறுமதி<br>ரூபா மில்லியன் | 3/31/2015<br>பெறுமதி<br>ரூபா மில்லியன் |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 20.07 | 24.02 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 116.71 | 101.06 |
| உரித்துக்கள் | (48.42) | (37.69) |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 28.15 | 34.80 |
| நடைமுறை பொறுப்புகள் | 157.05 | 127.96 |
| | | |
| வருமானம் | 133.70 | 165.56 |
| செலவினம் | 147.03 | 150.32 |

| | | |
|---|---|---|
| மிகை / (பற்றாக்குறை) | (13.33) | 15.26 |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | 2016 சனவரி 21 ஆந் திகதி மற்றும் 2018 யூலை 02 ஆந் திகதி இடம்பெற்ற மோட்டார் வண்டி மற்றும் வேன் வண்டியின் விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கைள் 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1645(ஆ) மற்றும் (இ) மற்றும் 1646 | நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு ஆகியன கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரணமானம் 1647(3) மற்றும் நிதிப்பிரமாணம் 11 தொகுதி IV பட்டோலை | வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | 06 மாதங்களுக்கு ஒரு தடைவ வாகனங்களின் எரிபொருள் நுகர்வானது பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

### 3.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்வரும் நிதியாண்டில் நடைமுறைப்படுத்தவதற்கு எதிர்பார்த்துள்ள வணிக நடவடிக்கைகள் உள்ளடங்கலான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் அகவிதிக்கமைய கம்பனியால் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) கோழித் தீனிகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான பின்புலத்தை ஒழுங்குபடுத்தல், கோழித் தீனியினை உற்பத்தி செய்ய தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல், கோழித் தீனியை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.

(ii) மாட்டின் நேரடி மற்றும் மறைமுகமான பாகங்களை விற்பனை செய்தல், உற்பத்தி செய்தல், இறக்குமதி, ஏற்றுமதி. பொதியிடல் மற்றும் பரிமாற்றம் செய்தல்.

(iii) பட்டர், சீஸ், ஐஸ்கிறீம் தயாரித்தல், விற்பனை செய்தல், இறக்குமதி, மற்றும் பரிமாற்றம் செய்தல்.

(iv) தானிய உற்பத்தி மற்றும் தானிய வகைகள் பழவகைகள், மாவு மொத்த மற்றும் சில்லறை வியாபாரம்.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்காக கம்பனியால் செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது கால்நடை வளங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் மாத்திரம் ஆவதுடன், கம்பனிக்கு சொந்தமான பண்ணைகளில் விவசாய, ஏனைய பயிர்ச் செய்கைகள் மற்றும் நிர்மாணங்களின் ஆகியவற்றின் செயன்முன்னேற்றம் உள்ளடங்கலான ஒட்டுமொத்த நிறுவனத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தில் காண்பிக்கப்பட்டுள்ள போதிலும் செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

2016/2017 ஆம் ஆண்டிற்காக நிறுவனத்தினால் புரள்வின் அடிப்படையில் 0.5 சதவீதமான பொருளாதார சேவைக் கட்டணமொன்று 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அந்த வருடத்திற்கான கம்பனியின் வெளியிடப்பட்ட புரள்வான ரூபா 172,941,952 தொகையில் அடிப்படையில் பொருளாதார கட்டணம் 2018 ஒக்டோபர் 25 ஆந் திகதி வரையிலும் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 சனவரி மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கமைய 07 தொகுதி புரோயிலர் கோழிகளின் ஒரு தொகுதி கோழிகள் 1,993 மற்றும் 4,934 இற்கு இடைப்பட்ட அளவிற்காக விலங்கு உணவுகளை பெற்றுக்கொள்வதற்கும் குறிப்பினை பரிட்சிக்கும் போது விலங்கொன்று வளர்ச்சியடையும் நாளொன்றுக்குரிய நியம அடிப்படையிலான நிறையை விட உள்ளவாறான திறையானது 65 கிராம்கள் முதல் 307 கிராம்கள் வரையான வீச்சில் குறைவான நிறையுடன் இருந்தமை அவதானிக்கப்பட்டது. கோழி உணவு உரியநியமத்திற்கமைய இல்லாதிருந்தமையா் விலங்குகளின் பாரம் குறைவடைதல் கம்பனியின் வருமானம் குறைவடைவதற்கான காரணமாக அமைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் புரோயிலர் கோழிக் குஞ்சுகளை விற்பனையானது பிரதானமான வருமான மூலமாவதுடன், அந்த விலங்குகளை விற்பனை செய்வதற்காக உரிய நடைமுறையொன்று பின்பற்றப்படாமை, அதற்காக நிலவும் சந்தை நிச்சயமற்ற தன்மைக்காக மற்றும் உரிய கொள்கையொன்று நடைமுறைப்படுத்தப்படாமையின் அடிப்படையில் 2016 சனவரி மாதம் முதல் 2018 செப்தெம்பர்வரையிலும் ஒரு குஞ்சொன்றின் சந்தை விலையில் ரூபா 30 இற்கும் ரூபா 150 இற்கும் இடைப்பட்ட உயர்வான தளம்பல்கள் நிலவுகின்றமையால் விலங்கொன்றின் சாதாரணக் கிரயமான ரூபா 46 தொகையான பெறுமதியும் பெருமளவான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளமுடியாத நிலமையொன்று காணப்பட்டது.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

2015 ஆம் ஆண்டு வரையிலும் நாளாந்தம் சுமார் 3 தொன்கள் அளவான உற்பத்தி செய்த ஹூரகஸ்வெவ கோழி உணவுத் தயாரிப்பு நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள போதிலும் இயந்திரம் 2015 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையிலும் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் அலுவலக சேவையில் ஈடுபட்டுள்ள 33 உத்தியோகத்தர்களுக்கு கணக்காய்வு திகதியான 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையிலும் பணி ஒப்படைப்பு எழுத்து மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்றை உருவாக்கி பொதுத்திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவேண்டியதுடன், அந்த சுற்றறிக்கையின் 9.3.1 பிரிவிற்கமைய கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுர்வு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அதற்கு உரிய அமைச்சினதும் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 வாகனக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைக்குரிய டபள் கெப் வண்டியொன்று தலைவரால் பயன்படுத்தப்படுவதாக கணக்காய்வினால் 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த வாகனம் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையிலிருந்து பெற்றுக்கொள்ளல் தொடர்பிலும் தலைவருக்கு வழங்கப்பட்டமை தொடர்பிலான எந்தவொரு எழுத்துமூல ஆவணமும் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் அல்லது மஹாவலி கால்நடை வியாபார கம்பனியிடம் இருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 08 ஆந் திகதிய BD/RDS/124/CM/07 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கமைய மஹாவலி அதிகாரசபைக்குரிய கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருந்த 05 லொறிக் கம்பனிக்குரிய அமைச்சாகிய கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையிலும் அந்த வாகனம் கையளிக்கப்பட்டிராததுடன், 30/2016 ஆம் இலக்க மற்றும் 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்திக்கமைய பழுதுபார்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் ஆகக் குறைந்தது மூன்று வருட காலத்திற்காக பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்படவேண்டியதுடன், அதன்பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விரிவாக தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், கம்பனியால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 மார்ச் 15 ஆந் திகதியின் பிரகாரம் மேலதிக 33 இன் ஊடாக திருத்தப்பட்ட பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி இலக்கம் 2.14.1 இன் பிரகாரம்ரூபா 100 மில்லியன் மற்றும் ரூபா 250 மில்லியனுக்கு இடைப்பட்ட பெறுமதியுடனான பெறுகை நடவடிக்கைகள் அமைச்சின் பெறுகைகள் குழுவினூடாக திறந்த போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரல் நடைமுறையினூடாக மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும், 2017/2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 113,232,452 பெறுமதியான உணவுக் கொள்வனவகள் விலங்கு உணவுகளுக்கு உரிய போசனை உள்ளடக்கம் தொடர்பான அமைப்புக் குறியீடுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது கொள்வனவு செய்யாது 2015 திசெம்பர் மாதம் 17 ஆந் திகதிய தலைவரின் கடிதத்திற்கமைய ஒரு தனியார் நிறுவனமொன்றினூடாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடைவ பின்வரும் மீள் கட்டளை முறைமையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2017 மார்ச் 15 ஆந் திகதிய மேலதிக 33 இனால் திருத்தப்பட்ட பந்தி இலக்கம் 2.14.1 இன் பிரகாரம் ரூபா 5 மில்லியனுள் ரூபா 8 மில்லியனுக்கும் இடைப்பட்ட பெறுமதியுடனான பெறுகை நடவடிக்கைகள் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் ஆகக் குறைந்தது. மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைக்கோரல்களை பெற்றுக்கொண்டு அமைச்சின் பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக விலைக் கோரப்படாமல் ஒரே நிறுவனத்திடமிருந்து மீண்டும் பின்வரும் கட்டளையிடும் முறைமையின் கீழ் 2017/2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,624,540 தொகையான தாய் விலங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முறையான பாதீடொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் |
|---|---|---|
| (அ) | பெறுகைகள் | பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| (ஆ) | சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்கள் உரிய முறையில் சுவீகரிக்கப்படாமை மற்றும் சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை |
| (இ) | பதிவேடுகளை பேணுதல் | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | தகவல்கள்உள்ளடக்கப்பட்டு வாக சம்பவக்குறிப்பு புத்தகம் பூர்த்தி செய்யப்பட்டிராமை, வாகனங்கள் தொடர்பான வருடாந்த மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்படாமை, பண்ணைகளுக்குள் நுழையும் மற்றும் வெளியேறும் வாகனங்கள் தொடர்பில் உரிய |

| | | |
|---|---|---|
| | | பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமை |
| (உ) | உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளின் பராமரிப்பு | தனிப்பட்ட கோவைகளை இலக்கமிடப்பட்டு பேணாமை, உத்தியோகத்தர்களின் நடத்தைக் குறிப்பு பத்திரங்களை நாளதுவரையாக பேணாமை, உத்தியோகத்தர்களின் கல்விச் சான்றுதழ்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தாமை. |